www.Padasalai.Net www.TrbTnpsc.com

V11Com

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2025

-----

# வகுப்பு 11

## வணிகவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள்: 90

பகுதி - I 20×1=20

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) வியாபாரம் மற்றும் வணிகம் ………… பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
அ) பாண்டியர் ஆ) பல்லவர் இ) சேரர் ஈ) சோழர்

2) மருத்துவர் தொழில் என்பது ………..
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத்தொழில் ஈ) தனியாள் வணிகம்

3) ஒரு முழுப்பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது
அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ) செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்
இ) தொடர்முறை உற்பத்தித் தொழில் ஈ) ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

4) தொழில் அமைப்புகளின் வடிவங்களில் மிகவும் பழமையானது
அ) கூட்டுறவுச் சங்கம் ஆ) தனியாள் வணிகம்
இ) நிறுமம் ஈ) கூட்டாண்மை

5) இந்து கூட்டுக்குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
அ) உடன்படிக்கையால் ஆ) பிறப்பால்
இ) முதலீட்டின் அடிப்படையில் ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்

6) நிறுமத்தின் இயக்குநர் ………… ஆல் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
அ) கடனீட்டு பத்திரதாரர் ஆ) கடனீந்தோர் இ) பங்குதாரர் ஈ) கடனாளர்

7) கீழ்க்கண்டவற்றில் எது, "ஒரு நபர், ஒரு வாக்கு" என்ற கோட்பாட்டில் இயங்கி வருகின்றது?
அ) கூட்டாண்மை ஆ) அரசு நிறுமங்கள்
இ) கூட்டுப்பங்கு நிறுமம் ஈ) கூட்டுறவு சங்கம்

8) பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில், யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?
அ) கிளைகள் ஆ) அதன் துணை நிறுவனங்கள்
இ) தலைமையகம் ஈ) நாடாளுமன்றம்

9) அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம்
அ) லாபம் ஈட்டுதல் ஆ) வேலைவாய்ப்பை உருவாக்குதல்
இ) மக்களுக்கு சேவை செய்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

10) இந்திய மைய வங்கி என்பது
அ) ஐ.சி.ஐ.சி.ஐ ஆ) பி.என்.பி இ) எஸ்.பி.ஐ ஈ) ஆர்.பி.ஐ

11) உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது
அ) கிராம சேமிப்பு ஆ) வணிகச் சேமிப்பு
இ) தொழிற்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி

12) எந்த வகையான கணக்கு, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சில தொகையைச் செலுத்த வேண்டியது கட்டாயம்?
அ) சேமிப்பு வைப்பு ஆ) நிலையான வைப்பு இ) நடப்பு வைப்பு ஈ) தொடர் வைப்பு

13) பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ………… பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
அ) பிணையக் காப்பு ஆ) தனியார் இ) குளிர்பதன ஈ) கூட்டுறவு

14) சரக்குகளை சரக்கேற்றிகள் மூலம் எடுத்துச் செல்வதற்காக வழங்கப்படும் ஒப்புதல் …………
அ) கப்பல் வாடகை ஒப்பாவணம் ஆ) வழிச்சீட்டு
இ) கப்பல் இரசீது ஈ) சரக்குக் குறிப்பு

15) ………… ஒரு பொதுக் காப்பீட்டு வகையினைச் சார்ந்தது அல்ல.
அ) கடல்சார் காப்பீடு ஆ) ஆயுள் காப்பீடு இ) உடல்நலக் காப்பீடு ஈ) தீக்காப்பீடு

16) புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை …………
அ) அலகுகள் ஆ) உற்பத்தித் திறன் இ) செலவு குறைப்பு ஈ) திறன்

17) பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு ஆகாது?
அ) நியாயமான ஊதியம் ஆ) சரியான வசதிகள்
இ) சமூகப் பாதுகாப்பு ஈ) சுரண்டல்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18) நெறிமுறைகளுக்கான தேவைகள்
அ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஆ) உயர்மட்ட மேலாண்மை
இ) நடுத்தர அளவிலான மேலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

19) கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான ............ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.
அ) வட்டி ஆ) விகிதங்கள் இ) பங்காதாயம் ஈ) இலாபம்

20) ............ என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.
அ) பெருநிறுவன பத்திரங்கள் ஆ) உலகளாவிய வைப்பு இரசீது
இ) அரசுப் பத்திரங்கள் ஈ) அந்நிய செலாவணி மாற்று பத்திரம்

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**
**வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
22) வணிகத்தை வரையறுக்கவும்.
23) கூட்டுரு சாரா நிறுவனங்கள் - பட்டியலிடுக.
24) துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.
25) இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
26) சிறப்பு பண்டகச் சாலைகள் என்றால் என்ன?
27) தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?
28) தொழில்துறை நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?
29) அஞ்சலக சேமிப்பு திட்டங்கள் ஏதேனும் நான்கினை எழுதுக.
30) கடனீந்தோர் ஒருவர் கடனாளியின் மீது காப்பீடு எடுப்பது எந்த கோட்பாட்டின் அடிப்படையில்? விளக்குக.

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**
**வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.
32) சிறுகுறிப்பு வரைக:
(அ) பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள் (ஆ) மரபுசார் உற்பத்தி தொழில்கள்
33) வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
34) வீட்டுவசதி கூட்டுறவு பற்றி சிறுகுறிப்பு வரைக.
35) இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
36) பண்டக காப்பாளர் இரசீது, பண்டக சான்றாணை - வேறுபடுத்துக.
37) கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?
38) கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளைக் குறிப்பிடுக.
39) அமெரிக்க வைப்பு இரசீதின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.
40) இந்து கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகளில் ஏதேனும் மூன்றினை விவரிக்கவும்.

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35**

41) அ) வணிகத்தின் தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) ஏட்டுக் கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரிக்கவும்.
42) அ) உற்பத்தி தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க. **(அல்லது)**
ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?
43) அ) தனியாள் வணிகத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)
44) அ) வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) உலகளாவிய வைப்பு இரசீது, அமெரிக்க வைப்பு இரசீது - வேறுபடுத்துக. (ஏதேனும் 5)
45) அ) காப்பீட்டின் கோட்பாடுகள் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.
46) அ) தொழிலின் சிறப்பியல்புகள் யாவை? **(அல்லது)**
ஆ) குறிப்பு வரைக:
(i) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம் (ii) குத்தகை நிதி (iii) அடகு கடன் (iv) தூய கடன்
47) அ) துறைவாரி நிறுவனங்களின் தன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும். (ஏதேனும் 5)

----------

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com